# IN THE COURT OF II ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, THANJAVUR

## DEPOSITION OF WITNESS

| | | |
|---|---|---|
| Case No | : | SC. 114/2021 |
| Prosecution Witness | : | PW- 13 |
| Name | : | இளையராஜா |
| Father Name | : | நடராஜன் |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | 37 |

***Solemnly affirmed in accordance with the provisions of Act of 1873 of the day of 01.10.2024***

**1ம் எதிரி ஆஜர், 2, 3 எதிரிகள் வருகை**

**அரசு தரப்பில் முதல் விசாரணை** :-

நான் பள்ளியக்கிரகாரம் காந்தி நகரில் வசித்து வருகிறேன். நான் கொத்தனார் வேலை செய்து வருகிறேன். இறந்துபோன குணசீலன் என்பவரை எனக்கு தெரியும். இறந்துபோன குணசீலன் பள்ளியகிராகாரம் காந்தி நகரை சேர்ந்தவர் என்பதால் எனக்கு தெரியும். அவர் கோடியம்மன்கோவில் பின்புறம் உள்ள லாரி பட்டறையில் வேலை பார்த்து வந்தார். ஆஜர் எதிரிகளை எனக்கு தெரியும். நீதிமன்றத்தில் வலது புறம் முதலில் நிற்பவர் மணிகண்டன், 2வது கார்த்தி, 3வது அரசு. 17.05.2020 அன்று எங்கள் ஊர் காளியம்மன்கோவிலில் நான், குணா, மணிகண்டன் ஆகியோர் பேசிக்கொண்டிருந்தோம். அப்போது குணாவும் மணிகண்டனும் தகாத வார்த்தைகளால் பேசிக்கொண்டிருந்தார். பிறகு அவர்களுக்குள் தள்ளுமுள்ளு ஏற்பட்டது. பிறகு நான் வீட்டிற்கு சென்றுவிட்டேன். பிறகு ஒரு வாரம் கழித்து குணா இறந்துபோனதை தெரிந்துகொண்டேன். 29ம் தேதி அதாவது பிரச்சனை நடந்து ஒரு வாரத்திற்கு பிறகு நான் வேலைக்கு சென்று வந்தபோது தெருவில் கூட்டமாக இருந்தார்கள். என்ன நடந்தது என்று மோனிசாவிடம் கேட்டேன். அவர் குணா இறந்துவிட்டதாக தகவல் சொன்னார். பிறகு போலிசாரும் என்னை விசாரித்தார்கள். சம்பவ விபரம் தெரியாது என்று சொன்னேன்.

**எதிரிகள் தரப்பு குறுக்குவிசாரணை**

இல்லை.

நான் சொல்ல என் உத்திரவுப்படி தட்டச்சிடப்பட்டு, என் முன்னிலையிலும், மேற்பார்வையிலும், சாட்சிக்குப் படித்துக் காண்பிக்கப்பட்டு சாட்சியால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

இரண்டாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
தஞ்சாவூர்.